


**17. 07. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயில் சேவையை ஹரியானா மாநிலம் ஜின்ந்த் - சோனிப்பத் இடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று துவக்கி வைத்தார்.

எதிர்காலத்தில் ஹைட்ரஜன் ரயில் சேவை மேலும் விரிவுப்படுத்தப்படும் என்று கூறினார்.

2. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரை ஒட்டி நாளைமறுநாள் அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

3. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை தொடர்பான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

4. தென்காசி மலையடிப்பட்டி அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தொ◌ிவித்துள்ளார்.

5. ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு பி.வி. சிந்து முன்னேறினார்.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் ரயில்வே துறை கடந்த 12 ஆண்டுகளாக ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் வளர்ச்சிப் பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தொ◌ிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயில் சேவையை ஹரியானா மாநிலம் ஜின்ந்த் - சோனிப்பத் இடையே இன்று துவக்கி வைத்து பேசிய அவர், இந்த ரயில் சேவை அறிமுகம் செய்யப்பட்டதால் இந்திய வரலாற்றில் ஜின்ந்த் நகரம் சிறப்பிடத்தை பெறுவதாக குறிப்பிட்டார்.

பி.ஜே.பி. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் நல்லாட்சியின் மாதிரி அடையாளமாக ஜின்ந்த் நகரம் உருவெடுத்துள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

வரும் ஆண்டுகளில் ஹைட்ரஜன் ரயில் சேவை மேலும் விரிவுப்படுத்தப்படும் என்றார்.

தற்போது 3 முதல் 4 நாடுகளில் மட்டுமே ஹைட்ரஜன் ரயில் சேவை இயங்குவதாக கூறிய அவர், 3 ஆயிரத்து 200 குதிரை சக்தி திறனுடன் உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த நெடுந்தொலைவு சேவை ரயிலாக இது திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் ஹைட்ரஜன் ரயில் சேவை நம்நாட்டின் தொழில் நுட்ப சாதனையை பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

உள்நாட்டிலேயே ஹைட்ரஜன் தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டுமென்ற நம் தேசத்தின் தீர்மானம் இதன்மூலம் எட்டப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் தேவையின்றி முற்றிலும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ரயிலாக இந்த நவீன ரயில் திகழ்கிறது என்றார்.

கடந்த 11 ஆண்டுகளாக திரு. நரேந்திர மோடி அரசு மேற்கொண்ட விரிவான ரயில்வே துறை நவீனமயமாக்கலின் ஒருபகுதியாக இந்த சாதனை நிகழ்த்தப் பட்டிருப்பதாகவும் திரு. அஷ்விணி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மழைக்கால கூட்டத்தொடர்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்குவதை ஒட்டி நாளைமறுநாள் அனைத்துக்கட்சிகளின் நடாளுமன்ற தலைவர்கள் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இரு அவைகளும் சுமூகமாக நடைபெற அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை மத்திய அரசு இந்த கூட்டத்தில் கோரவுள்ளது.

இதனிடையே பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமும் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் திங்கட்கிழமை ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் 13-ம் தேதிவரை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அரசுமுறை பயணமாக மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ருமேனியா நாடுகளுக்கு நாளைமறுநாள் புறப்படுகிறார்.

இப்பயணத்தின் போது இருதரப்பு உறவுகள் குறித்து அந்தந்த நாடுகளின் தலைவர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை குறித்த பட்ஜெட்டிற்கு முந்தைய ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

அனைவருக்கும் தரமான வீடு வழங்குவது மற்றும் நகர்ப்புற வளர்ச்சிகளை உறுதி செய்வது குறித்து இதில் ஆய்வு செய்யப்பட்டது.

சென்னை, திருச்சி, கோவை, உள்ளிட்ட நகரங்களில் குடிசையில்லா நகரத்தை உருவாக்குவது குறித்து விரிவான ஆலோசனைகளும் இதில் மேற்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

தியாகிகள் தினம்

தியாகிகள் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி ஒட்டி முதலமைச்சர் திரு. விஜய் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் தியாகிகளின் உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று மனித நேயமும், நாட்டுப்பற்றும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் என்று கூறியுள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள தியாகிகள் சங்கரலிங்கனார், பாஷ்யம், செண்பகராமன் ஆகியோரது திருவுருவச்சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு. ராஜ்மோகன், திரு. வன்னிஅரசு உள்ளிட்டோர் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖

அர்ஜுன்ராம் மெஹ்வால்

சமத்துவம், நீதி, பரிவை உள்ளடக்கிய சமூகத்தை கட்டமைப்பது சமுதாயத்தின் பொறுப்புடன் கூடிய பங்களிப்பாகும் என்று மத்திய சட்ட நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

சர்வதேச நீதியியல் தினத்தை ஒட்டி சமூக வலைதளப்பதிவில் இதனை தொிவித்துள்ள அமைச்சர், சமவாய்ப்புகளை உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கி மனித மாண்பிற்கு மதிப்பளித்து குடிமக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தொிவித்துள்ளார்

சங்கு வளையல்கள், தங்கத்தினாலான மணிகள், இரும்பு பொருட்கள், செப்பு நாணயங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்று தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

தொடர் தொல்லியல் பணிகளும், அறிவியல் பூர்வமான ஆய்வு முடிவுகளும், தமிழர்களின் தொன்மையை உலகிற்கு பறைசாற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

அருண் ராஜ்

தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையை இன்று ஆய்வுசெய்த அவர், காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

ரெஸ்டோ பார்

தமிழ்நாட்டில் உணவகங்களுடன் இணைந்த குடிப்பகங்களை உள்ளடக்கிய ரெஸ்டோ பார் அமைப்பதற்கான உரிமம் வழங்கும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டுமென்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த திட்டம் பெரும் தீங்கை விளைவிக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

இதனிடையே இத்திட்டம் தொடர்பாக எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை என்று டாஸ்மாக் நிர்வாகம் தொிவித்துள்ளது.

டாஸ்மாக் துறையை சீரமைப்பது தொடர்பான ஆலோசனைகள் மட்டுமே நடைபெற்றதாகவும் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

மக்கள் தொகை

தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணிகள் வரும் ஒன்றாம் தேதி தொடங்கவுள்ள நிலையில் பொதுமக்கள் தங்களது விவரங்களை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யும் பணி தொடங்கியுள்ளது.

இம்மாதம் 31-ம் தேதிவரை se.census.gov.in என்ற இணையதளத்தில் தங்களது விவரங்களை பதிவேற்றம் செய்யலாம்.

சுய விவர பதிவேற்றத்தில் தவறான தகவல் அளித்திருந்தாலும், வீட்டிற்கு வரும் கணக்கெடுப்பாளர்கள் மூலம் திருத்திக்கொள்ளலாம் என்று ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கந்தசாமி தொிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

தூத்துக்குடி, மதுரை, அரியலூர், தர்மபுரி, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அந்ததந்த மாவட்டங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

நில மோசடி

பழனியில் 100 கோடி ரூபாய் நில மோசடி நடைபெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை காப்பாற்ற த.வெ.க அமைச்சர்கள் முயல்வதாக தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. சட்ட இணை செயலாளர் திரு. பரந்தாமன் இந்த நிலம் பதிவு செய்யப்பட்டது தொடர்பான தகவல்களை காவல்துறையினர் மறைப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனிடையே இதுதொடர்பான விசாரணையை CBCID இன்று தொடங்கியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசின் நலத்திட்ட செயல்பாடுகள் குறித்த மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு குழு கூட்டம் அதன் தலைவர் திரு. அண்ணாதுரை தலைமையில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் அனைத்து திட்டங்களின் பணிகள், செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ஆடி

ஆடி முதல் வெள்ளிக்கிழமையை ஒட்டி சமயபுரம் உறையூர், தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோவில் உள்ளிட்ட அனைத்து அம்மன் கோவில்களிலும் இன்று காலை முதலே சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் ஆடி மாத முதல் பிறப்பை ஒட்டி பாரம்பரியமிக்க தேங்காய் சுடும் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டம் விப்பேடு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை மாநில அமைச்சர்கள் திரு. தென்னரசு, திரு. ரஞ்சித்குமார் ஆகியோர் இன்று திறந்து வைத்தனர்.

நாகை மாவட்டம் பட்டமங்கலம் ஊராட்சியில் கிராமப்புற பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற சம்பவங்களை தடுப்பது குறித்த இலவச சட்ட விழிப்புணர்வு முகாம் முதுநிலை உரிமையியல் நீதிபதி சுப்புலட்சுமி தலைமையில் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு பி.வி. சிந்து முன்னேறியுள்ளார்.

காலிறுதி போட்டியிலிருந்து ஜப்பானின் **Nozomi Okuhara** விலகியதையடுத்து சிந்து நேரடியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

நாளை நடைபெறும் அரையிறுதியில் சீனாவின் **Yu Fei Chen** னை சிந்து எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.